# காப்பிய நுழைவாயில்

ந. வீ. செயராமன்

தமிழில் அமைந்த காப்பிய இலக்கிய வகைகளில் முதல் நூலாகத் திகழ்வது சிலப்பதிகாரம். இளங்கோவடிகள் தன் காப்பியமான சிலப்பதிகாரத்தின் மூலம் பல் வேறு காப்பிய மரபுகளைத் தமிழுலகுக்குத் தந்துள்ளார். காப்பியத்தின் தொடக்கப் பாடல் அல்லது தொடக்கப்பகுதியின் மூலம் காப்பிய அமைப்பு, கருப்பொருள், கதை நிகழ்ச்சி, பாத்திரப் பண்பு, சமுதாய மரபுகள் ஆகியவற்றை உணர்த்துவதும் ஒருவகைக் காப்பியமரபு என்ற நெறியையும் இளங்கோவடிகள் தமிழுலகுக்கு உணர்த்தியுள்ளார். இளங்கோவடிகள் காட்டிய இம்மரபைப் பிற்காலக் காப்பிய ஆசிரியர்களும் கவினுறப் போற்றி வளர்த்துள்ளனர். காப்பியச் சிறப்புகளையெல்லாம் காப்பியத்தின் நுழைவாயிலாக அமைந்த தொடக்கப்பகுதியிலேயே காட்டும் சிறப்பை, இளங்கோவின் காப்பிய மாளிகையில் காண்கின்றோம்.

## முதற்காதை

சிலப்பதிகாரத்தின் முப்பது காதைகளில் முதற்காதையாக அமைவது மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் பெயரில் அமைந்த பகுதி. இப்பகுதியின் தொடக்கத்தில் திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் ஆகியவற்றை வாழ்த்தும் நூல்வாழ்த்து இடம் பெற்றுள்ளது.

புகார்ச்சிறப்பு, கண்ணகி அறிமுகமும் பண்பு நலனும், கோவலன் அறிமுகமும் பண்பு நலனும், பெற்றோர்கள் திருமணம் செய்ய முடிவு செய்தல், திருமண நிகழ்ச்சிகள், திருமணத்தில் வாழ்த்து, அரச வாழ்த்து எனவரும் பகுதிகள் மங்கல வாழ்த்துப் பாடலின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன. முதற் காதையாகிய மங்கல வாழ்த்துப் பாடலின் அமைப்பு இதுவே.

## காதைப்பெயர்

இளங்கோவடிகள் தன் நூலின் முதற் பகுதிக்கு மங்கல வாழ்த்துப்பாடல் எனப் பெயரிட்டுள்ளார். முதற் பகுதிக்கு இம்முறையில் பெயர் வைத்தமைக்கு ஆழ்ந்த காரணங்கள் உள. மங்கலம் என்ற சொல்லுக்குத் திருமணம் என்பது பொருள். "மங்கலம் — கலியாணம்" என்றே சிலம்பின் பதிகப்பகுதியில் அடியார்க்கு நல்லார் விளக்கம் கூறியுள்ளார். "மறுவின் மங்கல அணியே அன்றியும்" *(2:63)* என்றும் "மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்" *(4:50)* என்றும் வரும் சிலம்புப் பகுதிகள் திருமணப் பெண்டிருக்கு உரிய இயற்கையழகைக் குறிக்கும் தொடர்களாய் உள்ளன. "மங்கலம் என்ப மனைமாட்சி" *(60)* என்ற குறள் தொடர், மங்கலம் என்ற சொல்லுக்கு நன்மை என்ற பொருளைத் தருகிறது, இங்ஙனம், மங்கலம் என்ற சொல் திருமணம், திருமணத்தால் பெண்டிருக்கு அமையும் அழகு, திருமணமாகிய நற்செயல் ஆகியவற்றை உணர்த்தித் திருமணத்தோடு தொடர்புடைய நிலையிலேயே வந்துள்ளது. இக்குறிப்பை உணர்த்தும் முறையில் இப்பகுதியின் பெயரில் "மங்கலம்" என்ற சொல் தொடக்கமாக இடம் பெற்றுள்ளது.

திருமணத்தில், பெண்டிர் மணமக்களை வாழ்த்தினர் என்பதை மங்கல வாழ்த்துப் பாடல் உணர்த்துகின்றது. "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக என ஏத்திச் சின்மலர் கொடுதூவி" *(61–62)* எனவரும் பகுதி மணமக்களை நோக்கி "மகளிர்" வாழ்த்திய பகுதி. இக்குறிப்பை உளங்கொண்டே, மங்கல வாழ்த்துப் பாடல் என்பதற்கு விளக்கம் கூறும் அடியார்க்கு நல்லார் "அவர் மணத்தில் மகளிர் வாழ்த்

துதலே உடைய பாடலும்" என்று விளக்கம் கூறியுள்ளார். திருமணத்தில் வாழ்த்து அமைந்த சிறப்புடைமையைச் சுட்டும் வகையில் இப்பகுதியின் பெயரில் வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது.

சமுதாயத்தில் மக்கள் கூடிச் செய்யும் பொது நிகழ்ச்சியில், நாட்டை ஆளும் அரசனை வாழ்த்திக் கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்வர் என்ற பழந்தமிழ்ச் சமுதாய மரபுக்கேற்ப, கோவலன்–கண்ணகி திருமணமாகிய பொது நிகழ்ச்சியிலும், சோழ மன்னனை வாழ்த்திக்கூறும் வாழ்த்துப்பாடல் இடம்பெற்றுள்ளது. எனவே, திருமண வாழ்த்து மட்டுமின்றி அரச வாழ்த்தும் இடம் பெற்றமையால் இப்பகுதியின் பெயரில் "வாழ்த்து" என்னும் சொல் இடம் பெற்றது மிகப்பொருத்தமே.

"மங்கல வாழ்த்துப் பாடல்" என்ற பெயரில் இறுதியில் "பாடல்" என்ற சொல் இடம் பெற்றுள்ளது. சிலப்பதிகாரப் பகுதிகள் பலவும் காதை என்றே பெயர் பெற்றுள்ளன. ஆனுல் இம்முதற்பகுதி காதை எனப் பெயர் பெருமல் பாடல் என்று கூறப் பெற்றுள்ளது. இதனை மங்கல வாழ்த்துக் காதை எனப் பெயர் கூருமல் மங்கல வாழ்த்துப்பாடல் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளதற்கு அடியார்க்கு நல்லார் மூன்று காரணங்கள் கூறியுள்ளார்.

"இஃது ஆசிரியப்பாவால் வாராது, கொச்சகக் கலியால் வருதலாலும், கதையை உடையது காதையாமாதலானும் அவ்வாறு இதில் கதை நிகழ்ச்சி இன்மையானும், வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருதலானும் இங்ஙனம் பெயர் கொடுத்தாரென உணர்க"

என்பது அடியார்க்கு நல்லார் விளக்கம். இது, மயங்கிசைக் கொச்சகக் கலி என்ற யாப்பில் அமைந்த பகுதி; அது, இசைப்பாடலாய் வருவதற்கு உரியது என்பதும், இப்பகுதி வாழ்த்தும் உரையும் பாடலுமாய் வருவது என்பதும் பொருந்திய விளக்கங்களே. எனினும் இதில் கதை நிகழ்ச்சி இல்லை என அடியார்க்கு நல்லார் கருதுவது பொருந்தாது. கோவலன்–கண்ணகி திருமண நிகழ்ச்சி இன்றியமையாத கதை நிகழ்ச்சி. கதை நிகழ்ச்சி இருந்தும், இப்பகுதியைப் பாடல் எனக் குறிப்பிட்டுள்ளமையால், இப்பகுதியில் இடம்பெறும் பாடற்பகுதிகள், கதை நிகழ்ச்சிகளைவிடச் சிறப்புடையவை என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதே பொருந்திய கருத்தாகும்.

எனவே, திருமணத்தின்போது மணமக்களை வாழ்த்தியும் அரசனை வாழ்த்தியும் பாடல் பாடினர் என்பதும், கதை நிகழ்ச்சியைவிட இவ் வாழ்த்தே சிறப்புடைய பொருண்மையாகக் கருதப்பட்டது என்பதும் இப்பெயரமைப்பால் அறிகிறோம். திருமணத்திற்கு வந்திருந்த பெண்களில் "உரையினர் பாட்டினர்" (55) ஆகியோரும் இருந்தனர் என்பதையும் இளங்கோவடிகள் உணர்த்தியுள்ளார். திருமண வாழ்த்துப் பாடல் பாடிய பெண்கள் "பாட்டினர்" எனக் கூறப்பட்டுள்ளனர்.

இங்ஙனம், மங்கலமாகிய திருமண நிகழ்ச்சி, திருமணத்தில் இடம்பெற்ற வாழ்த்து, வாழ்த்துக்கள் பாடலாகப் பாடப்பெற்ற சிறப்பு ஆகிய காரணங்களால் இப்பகுதி மங்கல வாழ்த்துப்பாடல் எனப் பெயர் பெற்றுள்ளது.

## நூல் வாழ்த்து

திங்களையும், ஞாயிற்றையும், மழையையும், பூம்புகாரையும், வாழ்த்திப் பாடும் தொடக்கப்பகுதி நூல் வாழ்த்தாகும். "வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்றிவற்றின் ஒன்று ஏற்புடைத்தாகி முன்வர இயன்று" என்பது தண்டியலங்கார இலக்கணம். இம்மூன்றுள் ஒன்ருே, சிலவோ காப்பியத்தின் தொடக்கத்தில் இடம்பெற வேண்டும் என்பது இங்குக் கூறப்படும் விதி. இதுபோன்ற காப்பிய விதிகள் பலவும் தோன்றுவதற்கு மூலமாக விளங்குவது சிலப்பதிகாரம்.

திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் என்ற இயற்கைப் பொருட்கள் நான்கு நூலின் தொடக்கத்தில் வாழ்த்தப்பட்டுள்ளன. ஒரு கடவுளுக்கு வாழ்த்துப்பாடி நூலைத்

தொடங்கும் பிற்கால இலக்கியமரபு, இங்கு மாற்றம் பெற்றுள்ளது. இயற்கைப் பொருட்களுக்கு வாழ்த்துக்கூறி நூலைத் தொடங்கும் புதிய அமைப்பு முறையை அறிமுகப்படுத்திய நிலையாலும், இளங்கோவடிகள் புரட்சிக் கவிஞராக விளங்கு கின்றார்.

திங்கள், ஞாயிறு, மழை என்ற மூன்றும் நாட்டின் வளத்துக்கு அடிப்படை யானவை. அடிப்படைப் பொருட்கள் மூன்றையும் வாழ்த்துவதன் மூலம், இளங்கோ வடிகள் இங்கு நாட்டுவாழ்த்தாகவே இப்பகுதியைப் பாடியுள்ளார் எனலாம். இதனை யொட்டி நான்காவது தாழிசையில் பூம்புகார் நகரின் சிறப்பு போற்றப்பட்டுள்ளது. இதனை இளங்கோவடிகள் நகரவாழ்த்தாகப் பாடினர் எனலாம். இம்முறையில் காப்பி யத்தின் தொடக்கத்தில் நாட்டுவாழ்த்தும் நகரவாழ்த்தும் இடம்பெற வேண்டும் என்ற காப்பிய மரபுக்கு இளங்கோவடிகள் வித்திட்டுள்ளார். பிற்காலத்தில் நாட்டு வாழ்த்தும் நகர வாழ்த்தும் இடம்பெறாத காப்பியங்கள் இல என்பதால், இம்மரபின் வளர்ச்சியை அறியலாம்.

முதல் மூன்று தாழிசைகள் நாட்டு வாழ்த்துப்பாடலாக அமைவதோடு மட்டு மின்றி அரச வாழ்த்துப்பாடலாகவும் அமைந்துள்ளன. திங்கள், ஞாயிறு, மழை என்ற மூன்றும் சோழமன்னனோடு தொடர்புபடுத்தியே பாடப்பெற்றுள்ளன. சோழனின் குடை போன்று உலகை வாழ்விப்பதால் திங்களைப்போற்றுதும் என்றும், சோழனின் ஆணைச் சக்கரம் போல் மேருவை வலம் வருதலால் ஞாயிறு போற்றுதும் என்றும், சோழனின் அளிபோல் சுரத்தலால் மாமழை போற்றுதும் என்றும் இம்மூன்றும் சோழமன்னனோடு தொடர்புபடுத்தியே பாடப்பெற்றுள்ளதைக் காணலாம். எனவே, இப்பகுதி அரசவாழ்த்தாகவும் அமைகிறது. "இவை நான்கு சிந்தியல் வெண்பாவும் செம்பியனையும் புகாரினையும் சிறப்பித்தன" எனவரும் அரும்பதஉரைகாரர் விளக்கமும் இதனைத் தெளிவுறுத்தும்.

கலித்தாழிசைகள் போல, சிந்தியல் வெண்பாவும் ஒரு பொருள் மேல் மூன் றடுக்கி வரும் என்ற யாப்பியல் மரபை அறிமுகப் படுத்தும் வகையிலும், இளங்கோ வடிகள் பாடிய நூல் வாழ்த்தின் முதல் மூன்று தாழிசைகள் சோழனைப் புகழ்தல் என்ற ஒருபொருள்மீது மூன்றடுக்கி வந்துள்ளன என்றும் இப்பகுதியால் அறியலாம்.

இனி, திங்கள், ஞாயிறு, மழை என்ற மூன்றும், காப்பியத் தலைமாந்தர்களாகிய கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரைக் குறிப்பிடும் வகையிலும் அமைந்துள்ளன என்பது பிறிதொரு சிறப்பாகும். திங்கள் தண்மையுடையது; ஞாயிறு வெம்மையுடை யது; மழை கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையது.

கண்ணகி என்ற பெண்ணுக்குத் தண்மையுடைய திங்களும், கோவலன் என்ற ஆடவனுக்கு வெம்மையுடைய ஞாயிறும் மிகுதியும் பொருந்தும் வகையில் உள்ளன. மாதவி, கணிகையர் குலத்தாளாயினும், கைம்மாறு எதிர்பாராத மழையைப்போல், கைம்மாறு எதிர்பாராத நிலையில் கோவலனின் கலையுள்ளத்திற்கு அடிமையாகி அன்பு பாராட்டிக் குலமகளாய் வாழ்ந்தாள். எனவே, மாதவியைக் குறிப்பாகச் சுட்டுவது மழை. இங்ஙனம் காப்பியத் தலைமாந்தர்களைக் குறிப்பால் புலப்படுத்தும் முறையிலும் இவ்வாழ்த்துப்பகுதி அமைந்துள்ளது.

இளங்கோவடிகள், நாட்டின் வளத்துக்கு அடிப்படையாக உள்ள பொருட்கள் சூரிய ஒளி, மழை, நிலம் என்ற மூன்றுமே என்பதை உணர்ந்தவர். இம்மூன்றும் சிறப்புற்ற நிலையில்தான், நாட்டின் விளையுள் பெருகும். விளையுள் பெருகியிருப்பதே நாட்டு வளம். வள்ளுவர் "*தள்ளா விளையுளும்*" (*731*) என நாட்டுவளத்திற்கு முதன் மைக்காரணம் அந் நாட்டின் விளையுளே ஆகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இம்முறையில் "ஞாயிறு போற்றுதும்" என்பதால், சூரிய ஒளியையும், "மாமழை போற்றுதும்" என்பதால் மழையையும், "பூம்புகார் போற்றுதும்" என்பதால் நிலத்தையும் இளங் கோவடிகள் போற்றியுள்ளார் என்றும், இம்முறையில் வேளாண்மை நோக்கிலும் தன் காப்பியத்தை மக்கள் காப்பியமாகப் பாடியுள்ளார் என்றும் கொள்ளலாம். இங்ஙனம்

கொள்ளும்போது, தொடக்கத்தில் அமைந்த "திங்களைப் போற்றுதும்" என்ற பகுதி, நூலில் மங்கல மொழியோடு தொடங்கப்பெற்ற தொடக்கமாகக் கொள்ளலாம்.

இனி, அரசனை வாழ்த்தும் தொடக்கப்பாடல்களில், அவரது குடை முதலாய அங்கங்களைப் பாடுவது புறத்திணை மரபு என்ற நிலையில், இளங்கோவடிகள் சோழனை வாழ்த்திப் பாடிய இந்நூல் வாழ்த்துப்பகுதியில், அவனது குடை முதலாய அங்கங்களைப் புகழ்ந்து பாடியுள்ளார் என்றும் இப்பகுதியைக் கொள்ளலாம். "குடை நிழல் மரபு என்றதனுல் கொடையும் திகிரியும் உயர்ச்சியும் புனைந்து கூறியவாறுயிற்று" என்று வரும் அடியார்க்கு நல்லார் உரை விளக்கப் பகுதியால் இதனை அறியலாம். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய தொல்காப்பிய உரையாசிரியர்கள் இப் பகுதியை மேற்கோள் காட்டி "இது குடைமங்கலம்" எனக் கூறியிருப்பதும் இங்கு அறியத்தக்கது, இம்முறையில், குடைமங்கலம் என்னும் புறத்திணை வாழ்த்தாகவும் கொள்ளத்தக்க வகையில் இந்நூல் வாழ்த்து அமைந்துள்ளது.

இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவற்றை வாழ்த்திப் பாடிய இப்பகுதி, வாழையடி வாழையாகப் பிற்கால உரையாசிரியர்களாலும் போற்றப்படும் நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளது. தக்கயாகப் பரணியின் உரையில் (பா. 9) "மதிவாழி, ரவிவாழி மழை வாழியே" எனச் சிலப்பதிகார முறையைப் பின்பற்றி உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளதால் இதனை அறியலாம்.

இங்ஙனம், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் தொடக்கத்தில் பாடியுள்ள நூல் வாழ்த்து என்னும் பகுதி, கடவுள் வாழ்த்தினைப் பாடும் மரபுக்கு மாறான இயற்கை வாழ்த்துப் பகுதியாக உள்ளது; நாட்டு வாழ்த்தும் நகர வாழ்த்தும் பாடும் பிற்காலக் காப்பிய மரபுக்கு மூலமாக அமைகிறது; சோழ மன்னனை வாழ்த்தும் அரசவாழ்த்தாகப் பொலிகிறது; ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவரும் தாழிசை மரபைச் சிந்தியல் வெண்பாவுக்கும் உரியதாகக் காட்டுகிறது; காப்பிய மாந்தர்களைக் குறிப்பால் உணர்த்துகிறது; வேளாண்மை நோக்கோடு அமைக்கப்பட்ட சிறப்பைப் புலப்படுத்துகிறது; புறத்திணை மரபின்படியும் அமைந்துள்ளது. வாழையடி வாழையாய்ப் பிற்காலத்தார் போற்ற இடம் தந்து மூலமாக விளங்குகிறது.

## புகார்ச் சிறப்பு

சிலம்பின் மூன்று காண்டங்களில் முதலாவதாக அமைவது புகார்க் காண்டம். காப்பியத் தலைமாந்தர்களாய கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரின் பிறப்பிடம் புகார் நகரம். சிலப்பதிகாரக் கதை புகார் நகரத்தில் தொடங்கி,மதுரையில் தொடர்ந்து வஞ்சியில் முடிகிறது. அனைத்துக்கும் மூலமாயும் முதன்மையாயும் அமைந்த புகார் நகரத்தின் சிறப்பைக் காப்பியத்தின் தொடக்கத்தில் போற்றுகின்றார் இளங்கோ.

புகார் நகரத்துக்குப் "புகார்" என்ற பெயர் எங்ஙனம் அமைந்தது என்ற வினவுக்கு விடைகூறுவார்போல,

> பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
> பொதுவறு சிறப்பில் புகாரே ஆயினும் (15–16)

எனக் கூறுகின்றார். புகார் நகரில் வாழும் மக்கள், சிறப்புடைய இந் நகரைவிட்டு வேறு இடத்திற்குக் குடி புகார் ஆதலால் இந் நகருக்கு இப்பெயர் உண்டாயிற்று என்று குறிப்பாகப் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்தியுள்ளார். பகை இன்மையாலும் வளம் உள்ளமையாலும் குடிமக்கள் வேறு இடங்களுக்குக் குடிபுகார். அங்ஙனம் குடி பெயர்ந்து செல்லும் இயல்பு இல்லாததால் பழங்குடி மக்களாக அவர்கள் வாழும் சிறப்புடையதாக உள்ளது. புகாருக்கு உள்ள சிறப்புக்கள் வேறு எந்த நகருக்கும் இல்லாதது என்பதைப் "பொதுவறு சிறப்பில் புகார்" என்ற தொடர் குறிப்பிடுகிறது. இங்ஙனம் பகைமையின்மை, வளம், பழங்குடி மக்களுடைமை, தனிச்சிறப்பு ஆகிய இயல்புகள் புகார் நகருக்கு உரியவை என இங்குச் சுட்டப்படுகின்றன.

அடுத்து, பொதிகை, இமயம், புகார் என்ற இம்மூன்றும் எக்காலத்தும் அழியாச் சிறப்புடையவை என்று உயர்ந்தோர் போற்றிக் கூறியுள்ளனர் என்ற சிறப்பை இளங்கோ மொழிந்துள்ளார். "நடுக்கின்றி நிலையிய என்பது அல்லதை ஒடுக்கம் கூறுார் உயர்ந்தோர்" (17-18) எனவரும் தொடர் இதனைச் சுட்டும்.

பொதிகை, இமயம் ஆகியவை மலைகள். மலைகளுக்கு இணையாகப் புகாரையும் இணைத்துக் கூறியுள்ளதால், அம்மலைகளைப் போலவே இந்நகரும் நிலைபேறும் உறுதியும் பெற்றது என்பதை உணர்த்துகின்றார் ஆசிரியர்.

பொதிகைத் தென்திசை மலை; இமயம் வடதிசையில் உள்ள மலை. வடக்கிலும் தெற்கிலும் உள்ளமலைகளைச் சுட்டுவதால் புகார் நகரின் புகழ்ச் சிறப்பின் எல்லையையும் இளங்கோ இங்குக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள மலைகளைச் சுட்டி இடையில் புகாரைச் சுட்டியிருத்தலால் புகார் நகரமும் அம்மலைகளுக்கு இணையான சிறப்பைப் பெற்றுள்ளது. சிவபெருமான் வாழும் பெருமை இமயத்திற்கும், தமிழ் முனிவன் அகத்தியன் வாழும் பெருமை பொதிகைக்கும் உரியவை. புகார் நகரம் சிவப்பொலிவும் தமிழ்ப்பொலிவும் ஒருங்கே பெற்றுள்ளது என்ற பெருமையும் இங்குச் சுட்டப்பட்டுள்ளது. இங்ஙனம், பூம்புகார் நகரத்தின் சிறப்புக்களும் பெருமைகளும் வெளிப்படும் வகையில் இமயம், பொதிகை ஆகிய மலைகளுடன் புகார் இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

வளம், புகழ், நிலைபேறு, பெருமை ஆகிய சிறப்புக்களைச் சுட்டுவதற்கு வடக்கும் தெற்குமாய திசைப் பொருட்களாகிய மலைகளைக் குறிப்பிட்டது போல, புகார் நகரின் இன்பச்சிறப்பைக் கூறுவதற்குக் கீழும் மேலும் அமைந்த நாடுகளின் இன்ப வாழ்வை எடுத்துக் காட்டியுள்ளார் இளங்கோவடிகள்.

கீழ் உலகமாகிய நாகர் உலகம், மேல் உலகமாகிய தேவர் உலகம் ஆகிய உலகங்களில் பெறப்படும் இன்பத்திற்கு இணையான இன்பம் தரும் சிறப்புடையது புகார் நகரம்

நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நகர் (21-22)

எனவரும் பகுதி இதனைச் சுட்டும். "சுவர்க்கம் பவணம் என்னும் இவற்றிற்குள்ள புகழும் போகமும் நிலைபெற்ற அப்புகார்" என்பது அடியார்க்கு நல்லார் உரைப்பகுதி. தேவர் உலகமாகிய சுவர்க்கலோகம், நாகர் உலகமாகிய பவணலோகம் ஆகியவற்றில் பெறும் புகழும் போகமும் இம்மண்ணுலகில் தரும் இடம் புகார் நகரமே எனப் புகாரின் சிறப்பு இங்குக் கூறப்பட்டுள்ளது.

சுவர்க்கம், நாகலோகம் ஆகிய இரண்டும் போகம் என்ற இன்பத்திற்குப் புகழ் பெற்ற இடங்கள் எனச் சமண நூல்களும் கூறுகின்றன. இளங்கோவடிகள் சமண முனிவர் ஆதலால் இம்முறையில் கருத்துரைத்தார் என்றும் கொள்ளலாம். இதனை "பவணம் — நாகலோகம்; சுவர்க்கத்தினும் நாகலோகம் போகத்திற் சிறந்தது என்பது சைன நூல் துணிபு" எனவரும் டாக்டர் உ.வே.சா. குறிப்பாலும் அறியலாம்.

இவ்விடங்களில் பெறும் போகம் நீள்புகழ் உடையது என்பதைச் சொல்லால் குறிப்பிட்டதோடு, நாக நீள், நாகநாடு, போகநீள் எனவரும் நெட்டெழுத்து அமைப்புச் சிறப்பாலும் இளங்கோவடிகள் இதனைப் புலப்படுத்தியுள்ளார். நீண்டு ஒலிக்கும் நெட்டெழுத்து அமைப்புடைய சொற்களும்கூட, இவ்விடங்களில் பெறும் நீள் புகழை, அமைப்பாலும் ஓசை நயத்தாலும் வெளிப்படுத்துகின்றன.

## பெற்றோர் அறிமுகம்

தந்தையை அறிமுகப்படுத்தி மக்களை அறிமுகப்படுத்துவது ஒரு மரபு. மேலும் திருமணக்காலத்தின்போது, பிள்ளை, பெண்களின் பெற்றோர் அறிமுகம் இன்றியமை

யாதது. அதற்கு மேலும், பெற்றோர்களை அறிமுகப் படுத்துவதற்குக் காப்பியத்தில் வேறு பொருத்தமான இடமும் இல்லை. இக்கருத்துக்களை உளங்கொண்டே, கண்ணகியை அறிமுகப்படுத்துமுன் கண்ணகியின் தந்தையையும், கோவலனை அறிமுகப்படுத்து முன், கோவலனின் தந்தையையும் இளங்கோவடிகள் நமக்கு அறிமுகப் படுத்துகின்றார்.

கண்ணகி தந்தையின் பெயர் மாநாய்கன்; கோவலன் தந்தையின் பெயர் மாசாத்துவான். இவற்றுள் மாநாய்கன் என்பது சிறப்புப் பெயர் என்றும் மாசாத்துவான் என்பது இயற் பெயர் என்றும் அடியார்க்கு நல்லார் உரைப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அரும்பத உரைகாரர் மாசாத்துவான் என்பதைக் குடிப் பெயர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விரு பெயர்களையுமே குடிப்பெயராகவும் சிறப்புப் பெயராகவும் கொள்வதே அவர்களின் செல்வச் சிறப்புப்பற்றிய இளங்கோவின் அறிமுகத்திற்குப் பொருத்தமாக இருக்கும்.

மாநாய்கன் என்பதால், கடல் வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டியவன் என்பதும், மாசாத்துவான் என்பதால் நிலவாணிகம் செய்து பெரும் செல்வச் சிறப்போடு வாழ்பவன் என்பதும் அறியத்தக்க செய்திகள். கப்பல்காரர், சாத்துக்காரர் என்பதுபோல, கடல் வாணிகம் செய்யும் குடிப் பெருமை உடைய கண்ணகியின் தந்தை மாநாய்கன் என்றும், சாத்து என்னும் வணிகக் குழுவின் மூலம் நிலவாணிகம் செய்யும் குடிப் பெருமை உடைய கோவலனின் தந்தை மாசாத்துவான் என்றும் அழைக்கப் பட்டனர்.

இருவரும், ஈட்டிய பெருஞ்செல்வத்தை இரவலர்க்கு அளிக்கும் புரவலர்களாகவும் விளங்கினர். "மாகவான் நிகர் வண்கை மாநாய்கன்" என்றும் "வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசத்துவான்" என்றும் வரும் தொடர்கள் இவர்களது ஈகைப் பண்புகளை விளக்குகின்றன.

இவர்கள் இருவரில் கண்ணகியின் தந்தையைவிடக் கோவலன் தந்தையே பெருஞ் செல்வன். அரசனுக்கு இணையாக வைத்து எண்ணத்தக்க செல்வமும் புகழும் உடையவன். "பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்" *(31–32)* எனவரும் தொடரால் கோவலன் தந்தைக்கு உரிய இச்சிறப்பு சுட்டப்படுகிறது, "உயர்ந்தோங்கு செல்வத்தான்" *(32)* என்றும் "இருநிதிக் கிழவன்" *(34)* என்றும் வரும் சிறப்புத் தொடர்களும் இதனை உணர்த்துகின்றன. இங்ஙனம் பெற்றோர் அறிமுகத்தைப் பொருந்திய வகையில், இளங்கோவடிகள், இங்கு அமைத்துக் காட்டியுள்ளார்.

## கண்ணகி - பண்பு நலன்

காப்பியத் தலைவியாகிய கண்ணகியையே ஆசிரியர் முதன் முதலில் அறிமுகப் படுத்துகின்றார். இவள், மாநாய்கனின் குலக்கொம்பர்; ஈகை வான் கொடி அன்னவள்; ஈராறு ஆண்டு அகவையாள்; திருமகள் வடிவு இவள் வடிவை ஒக்கும் என்றும், அருந்ததியின் கற்பு இவள் கற்பை ஒக்கும் என்றும் பெண்களே புகழும் சிறப்புடையவள்; சிறந்த குணங்களை உடையவள்; இவள் பெயர் கண்ணகி என்று கண்ணகியின் அறிமுகத்தை இளங்கோவடிகள் செய்துள்ளார்.

கண்ணகி, மாநாய்கனின் ஒரேமகள்; கண்ணகிக்கு உடன் பிறப்பாளர் எவருமிலர். மாநாய்கனின் செல்வத்திற்கு எல்லாம் கண்ணகியே வாரிசு. இவள் பொன்னிறம் பெற்ற கொடி போன்றவள் என அவள் மேனியின் பொன்னிறமுடைய சிறப்பு சுட்டப் பெற்றுள்ளது. திருமணப் பருவத்திற்குரிய நிலையில் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட பருவம் உடையவள். அழகில் திருமகளைப் போலவும், கற்பில் அருந்ததி போன்றும் சிறப்புடையவள் என்று நேர்முகமாகச் சொல்லாமல், திருமகளின் அழகு, இவள் அழகை ஒக்கும் என்றும், அருந்ததியின் கற்பு, இவள் கற்பை ஒக்கும் என்றும் கூறு

வதன்மூலம் சிறப்புக்குரிய அழகும் கற்பும் உடையவள் என்பதை இளங்கோ விளக்கி யுள்ளார். பெண்களே போற்றும் அழகும் கற்பும் உடையவள் எனக்கூறி, அச்சிறப்பு களுக்கு மேலும் மெருகூட்டுகிறார் இளங்கோ. குணங்களும் சிறந்து விளங்கப்பெற்றவள் கண்ணகி. இம்முறையில் அழகு, கற்பு, குணம் என்ற மூன்று பண்புகளும் உடையா ளாகக் கண்ணகி அறிமுகம் செய்யப்பட்டுள்ளாள்.

"ஆடலும் பாடலும் அழகும் என்றிக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்" *(3:8–9)* என மாதவியின் சிறப்பை மூன்று சொற்களால் குறிப்பிட்டதுபோல, இங்குக் கண்ணகியின் சிறப்பைக் குறிப்பிட அழகு, கற்பு, பண்பு என்ற மூன்று சொற்களை இளங்கோ பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

காப்பியத் தலைவிக்குக் கண்ணகி என்பது பெயர். "பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ" *(29)* எனவரும் தொடரால் இதனைக் கூறும் இளங்கோவடிகள், இப்பெயர் மூலம் இரு சிறப்புக்களைப் பெறவைக்கின்றார். "பெயர் மன்னுதல்" என்பதும் "கண்ணகி என்பாள்" என்பதும் அவ்விரு சிறப்புக்கள்.

கண்ணகி குலப்பெண்ணாய்ப் பிறந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தவள். கண்ணகி என் னும் பத்தினித் தெய்வ வழிபாடு நாடெங்கும் பரந்தது. இம்முறையால் அவள் பெயர் பிற் காலத்தில் தெய்வீகச் சிறப்போடு நிலைபெறப்போகின்றது என்பதைக் குறிப்பால் உணர்த்தும் முறையிலேயே "பெயர் மன்னும் கண்ணகி" என்றார் இளங்கோ.

கண்ணகி என்னும் பெயர் கண்-நகி எனப் பிரியும். கண்ணால் சிரிப்பவள் என்பது இதன் பொருள். மலர்ச்சியும் கவர்ச்சியும் உடைய கண்களைப் பெற்றவள் கண்ணகி என்பது அவள் பெயர் பெற்றமைக்குக் காரணம். இம்முறையில் அழகு, கற்பு, பண்பு என்ற மூவகை நலன்களையும், சிறப்பான கண்களையும் பெற்ற கண்ணகியை விடுத்தே கோவலன் பிரிந்தான். கண்ணகியின் இயற்கை அழகு பெற்ற கண்ணால் கவர்ச்சியையும் ஈர்ப்புத்தன்மையையும் பெறாதவனாகக் கோவலன் இருந்தான். ஆனால் மாதவியின் கண் களுக்குரிய ஈர்ப்புத்தன்மையில் கோவலன் வசப்பட்டான். இக்குறிப்பை உணர்த்தும் வகையிலேயே, மாதவியைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலெலாம் அவளை "மாமலர் நெடுங்கண் மாதவி" *(3:170, 6:174, 8:118)* என்றே இளங்கோவடிகள் குறிப்பாக உணர்த்திச் செல்கின்றார். இத்தகைய ஈர்ப்பு நிலையில் வசப்பட்டவனாகக் கோவலன் இருந்தான் என்பதையே "விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்" *(3:174)* என்றும் இளங்கோவடிகள் சுட்டியுள்ளார். இங்ஙனம், கண்ணகியைப் பற்றிய அறிமுகப் பகுதி, பல்வேறு பொருண்மைக் கூறுகளை உள்ளடக்கி மிளிர்கின்றது.

## கோவலன் - அறிமுகம்

காப்பியத்தலைவியாகிய கண்ணகியின் அறிமுகத்திற்குப் பின்னர், தலைவனாகிய கோவலனின் அறிமுகம் தொடர்கிறது. இவன், மாசாத்துவான் என்ற செல்வன் மகன்; பதினாறு வயது நிரம்பாதவன்; மண்ணின் புகழ் சிறுகும்படியான புகழினன்; பெண்கள் தம் ஆயத்துள்ளோரிடம் செவ்வேள் இவன் என்று காமக் குறிப்போடு பாராட்டும் சிறப்பினன்; கோவலன் என்ற பெயரினன் எனக் கோவலனைப் பற்றி இளங்கோ அறிமுகம் செய்துள்ளார்.

கோவலன் புகழ்ச்சிறப்பில் செல்வனாகிய மாசாத்துவான் மகன் என்பதே தலை யாய சிறப்பாக விளங்கியது. இத்தகைய செல்வன் மகனைச் செல்வவாழ்வு வாழ்ந்த மையால்தான், ஆயிரத்தெட்டுப் பொன் கழஞ்சினைத் தந்து மாதவியைப் பெற முடிந்தது. புகார் நகரத்தில், செல்வ நம்பியர்போல, "குரல் வாய்ப் பாணரொடும் நகரப் பரத்த ரொடும்" *(5:200)* திரிந்தான். இத்தகைய செல்வவாழ்வுக்கு உரிய மூலம், இங்கே, அவனைப்பற்றிய அறிமுகத்தில் முதன்மை பெறுகிறது.

உலகெங்கும் புகழும்படி வாழும் சிறப்பினன் என்பது அவனைப்பற்றிய அறிமுகத் தின் அடுத்த நிலை. "மண் தேய்த்த புகழினான்" *(1:36)* என இளங்கோவடிகள் இதனைச்

சுட்டியுள்ளார். இயல்பாகவே செல்வக் குடியில் பிறந்த கோவலனுக்கு அச்செல்வத்தைப் பயன்படுத்திப் புகழை ஈட்டவும் தெரிந்திருக்கிறது.

மணிமேகலையின் பெயர்சூட்டு விழாவில் "செம்பொன் மாரி செங்கையிற் பொழிய" (15:41) பொருளைப் பரிசிலர்க்குத் தந்தான்; முதிய அந்தணன் ஒருவனை யானையின் பிடியிலிருந்து காத்து "கடக்களிறு அடக்கிய கருணை மறவன்" (15:53) என்ற புகழைப் பெற்றான்; வடமொழி வாசகம் உடைய ஏட்டைப் பெற்று, அதனைக் கொணர்ந்த அந்தணன் மனைவியை அவள் கணவனோடு சேர்த்து, அவர்கள் வாழ்வுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து "நல்வழிப் படுத்த செல்லாச் செல்வனாக" (15:75) விளங்கினான்; பொய்சாட்சி சொன்னவனைப் பூதம் புடைத்துண்ட நிலையில் அவன் சுற்றத்தாருக்குப் பொருள் தந்து அவர்களைப் "பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மலாக" (15:90) விளங்கினான். இங்ஙனம் பொருளைச் செலவிட்டுப் புகழை ஈட்டியவன் கோவலன். இதனை உள்ளடக்கியே, இளங்கோ அவன் புகழைச் சீரிய முறையில் இங்கு அறிமுகப் படுத்துகிறார்.

பெண்கள், இவனை, முருகன் எனப் பாராட்டுவது பிறிதொரு அறிமுகம். பெண்கள் இவனை முருகன் எனப் பாராட்டுவதும், காதற் குறிப்போடு புகழ்வதும் கோவலனின் அழகுக்கும் ஆண்மைக்கும் உரிய சிறப்பே. எனினும் பிறர் நெஞ்சு புகாத கற்புடைமையை உடமையாகப் பெற்ற பெண்கள், இம்முறையில் தொடர்பில்லாத ஒருவனைப் பாராட்டுவதும் காமக்குறிப்போடு புகழ்வதும் புகார் நகரப் பெண்களின் கற்பு நிலைக்குச் சிறப்பைத் தாராது. எனவே, கோவலனைக் கண்டவரும், செவ்வேள் என்று புகழ்ந்தவரும், காதற் குறிப்போடு போற்றியவரும் பரத்தையரே எனக் கொள்வது சிறப்பாகும்.

இனி, இப்பகுதிக்கு மற்றவர்கள் கூறும் ஒரு விளக்கத்தையும் அடியார்க்கு நல்லார் காட்டியுள்ளார். "இனி, மடவார் என்பதற்குப் பூமாதும், கலைமாதும், சயமாதும், புகழ் மாதும், புவிமாதும் என்று கூறி, இவர் அழகிற்கும் அறிவிற்கும், ஆண்மைக்கும், புகழுக்கும், பொறைக்கும் இவனென்று உடகொண்டு ஏத்தும் கிழமையான் எனினும் அமையும்" என்பது அவ்வுரை, இம்முறையில் பொருள்கொண்டால், அழகு, அறிவு, ஆண்மை, புகழ், பொறை முதலிய பண்பு நலன்கள் கோவலனுக்கு உரியவை எனக் கொள்ளலாம்.

இம்முறையில், பொருட்சிறப்பும், ஆழமும் தோன்றும் வகையில் கோவலன் பற்றிய அறிமுகத்தை இளங்கோவடிகள் நிகழ்த்தியுள்ளார்.

## களவு மணமா?

கோவலன் கண்ணகி ஆகியோரின் திருமணத்தைச் சுட்டும் இளங்கோவடிகள் "அவரை, இருபெருங் குரவரும் ஒரு பெரு நாளான் மணவணி காண மகிழ்ந்தனர்" (40–42) என்று குறிப்பிட்டுள்ளார். இளங்கோவடிகள் கூறியுள்ளபடி, கோவலன் பெற்றோரும் கண்ணகி பெற்றோரும் கூடிப்பேசி, ஒரு நல்லநாள் பார்த்து, அந்நாளில் திருமணம் செய்ய முடிவு செய்தனர் என்பதே இங்கு விளக்கப்பட்டுள்ளது.

இதனை யொட்டியே இத்திருமண மரபு எவ்வகையைச் சார்ந்தது என்று விளக்கம் கூறும் அடியார்க்கு நல்லார், இக்காதையின் இறுதியில் "இது பிரசாபத்தியம்" என்றும் குறிப்பிட்டுள்ளார். வடமொழி மரபில், பெற்றோர்கள் இருவரும் பேசி முடிவு செய்யும் திருமணத்திற்குப் பிரசாபத்தியம் என்று பெயர். "பிரசாபத்தியமாவது, தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரும் மாறாதே உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீமுன்னர்க் கொடுப்பது" என இத்திருமணம் பற்றிய விளக்கத்தை நம்பி யகப்பொருள் கூறும். இக்குறிப்புகளால், கோவலன் கண்ணகியின் திருமணம் பெற்றோர்களால் முடிவு செய்து நடத்தப்பட்டதாகும் என அறிய முடிகிறது. இது தமிழ் மரபிற் குரிய பகுப்பில் பெருந்திணைக்கு உரியதாக அமையும்.

கோவலன் – கண்ணகியின் கதை தமிழ் நிலத்துக்கு உரியது; சிலப்பதிகாரமே தமிழின் முதற்காப்பியம். எனவே, தமிழ் நிலத்துக்கு உரிய ஒரு கதையில், தமிழின் முதற் காப்பியமாக அமைந்த ஒன்றில், தமிழ்க்காப்பிய மூலவராகிய இளங்கோவடிகள் பெருந்திணைச் சார்பு நிலையில் ஒரு திருமண நிகழ்ச்சியைக் கூறியிருப்பாரா என்பது ஐயத்திற்கும் ஆய்வுக்கும் உரிய செய்தியேயாகும்.

இம்முறையில் சிந்தித்து ஆய்வு நிகழ்த்திய அறிஞர்கள், பின்வரும் காரணங்களைக் கூறி, கோவலன் – கண்ணகியின் திருமணம் தமிழ் மரபுக்கேற்ப, களவு வழிப்பட்ட ஐந்திணை மணமே என விளக்கியுள்ளனர் என்பதும் இங்கு அறியத் தகும் செய்தியாகும். இதற்குப் பல சான்றுகளையும் காரணங்களையும் அவ்வறிஞர்கள் சுட்டியுள்ளனர்.

இளங்கோவிற்குப் பின்னர்க் காப்பியம் பாடிய ஆசிரியர்கள் திருத்தக்க தேவர், சேக்கிழார், கம்பர் ஆகியோர் தங்கள் காப்பியத்தில் களவு வழி நிகழும் ஐந்திணை மணத்தையே படைத்துக் காட்டியுள்ள நிலையில், காப்பிய மூலவராகிய இளங்கோ வடிகள் மட்டும் பெருந்திணை மணத்தைப் பாடியுள்ளார் என்பது பொருந்தாது.

கோவலன், கண்ணகி, ஆகியோர் பற்றிய அறிமுகப் பாடல்களில் "காதலால் கொண்டேத்தும் கிழமையான்" *(38–39)* என்றும் "காதலான்" *(29)* என்றும் வரும் பகுதிகளால், இளங்கோவடிகள் இவர்கள் களவு வழியில் காதலித்து மணந்த செய்தியையே குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். எனினும் பிற்கால உரையாசிரியர்கள் இத் தொடருக்குப் பொருள் கொண்டதில் பிழை ஏற்பட்டுவிட்டது. எனவே கோவலன் – கண்ணகி திருமணம் ஐந்திணைக்கு உரிய நிகழ்ச்சியேயாகும்.

கோவலன் பற்றிய அறிமுகப் பாடலில் "ஆயம்" என்ற சொல் பயின்றுள்ளது. அகப் பொருள் மரபில் தலைவியோடு உடன் உள்ள தோழியர் கூட்டத்தைச் சுட்டும் கலைச் சொல்லாகவே இது இலக்கியங்களில் பயின்றுள்ளது. இளங்கோ, இச்சொல் லாட்சியை இங்குப் பயன்படுத்தியிருப்பதால் இது அகப்பொருள் மரபுக்கு உரிய ஐந் திணைத் திருமணமாகவே கொள்ளவேண்டும் என்பதைக் குறிப்பால் புலப்படுத்துகிறது.

மேலே கூறிய மூன்று காரணங்களுக்கு மேலும் ஒரு சான்று உண்டு. கண்ணகியைப் பற்றிய அறிமுகத்தின்போது "தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்" *(27)* என இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். களவு வழியில் காதல் நிகழ்த்திய வாழ்வுடையவளாகக் கண்ணகி இருந்தமையால்தான், திருமணத்திற்கு முன்னரே அவளைக் கற்புடையவள் என இளங்கோவடிகள் குறிப்பிட்டார். களவுக்காதல் இல்லையென்றால், இம்முறையில் திருமணத்திற்கு முந்தியநிலையில் ஒரு கன்னிப் பெண்ணைக் கற்புடையவள் எனக் கூறுவது பொருத்தம் இல்லாததாய் அமையும். இக் காரணத்தாலும் கோவலன் கண்ணகி மணம், ஐந்திணைக்கு உரியதாகவே கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் ஆய் வாளர் குறிப்பிட்டுள்ளனர். இக்காரணங்களைக் காட்டி, கோவலன் – கண்ணகியின் திரு மணம், களவு வழிப்பட்ட ஐந்திணைக் காதல் மணமே என்பதை ஆய்வாளர் நிறுவியுள் ளனர்.

இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதேயாகும். மேலும் கோவலன் – கண்ணகி திருமணம், பண்டைக்காலத்தில் சமணர்களில் ஒரு பிரிவினர்களாகிய இல்லறத்தார் களாகிய சாவகநோன்பிகளின் திருமணம் எம்முறையில் நிகழ்ந்தது என்பதையும் உணர்த்துவதாகக் கொள்ளலாம். கோவலன் சாவகநோன்பி, இதனைச் "சாவகநோன்பி கள் அடிகள்" *(16:18)* எனவரும் பகுதியாலும் தெளியலாம். சமணசமயச் சார்புடைய நிலையிலும் கோவலன் – கண்ணகியின் திருமணத்தை இளங்கோவடிகள் இங்கு விளக்கி யுள்ளார் என்று அறிதல் வேண்டும். இம்முறையில், தமிழ் மரபு, சமணசமய மரபு ஆகிய இருவகை மரபுகளுக்கும் உரிய விளக்கமாகக் கோவலன் – கண்ணகி திருமணம் இங்கு விளக்கப்பட்டுள்ளது எனக் கொள்வது பொருத்தமுடையதாகும்.

## திருமண நிகழ்ச்சிகள்

கோவலன் – கண்ணகியின் திருமணத்தில் நடைபெற்ற இன்றியமையாத நிகழ்ச் சிகள், இளங்கோவடிகளால் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன.

நல்லநாள் பார்த்துத் திருமணம் செய்ய நிச்சயித்தல், திருமணச் செய்தியை ஊராருக்குத் தெரிவிக்க, சில பெண்களை அலங்காரம் செய்து யானைமேல் ஏற்றி அனுப்புதல், திருமாங்கல்யத்தை இசைக்கருவிகளின் முழக்கத்தோடு ஊர்வலம் செய்வித்தல், திருமணத்தினை அழகிய புதுமண்டபத்தில் நிகழ்த்துதல், மணமக்கள், பார்ப்பான் வேதம் ஓதத் தீ வலம் வருதல், திருமண மக்களை, மங்கலப் பெண்டிர் வாழ்த்துதல் முதலியவை இத்திருமண நிகழ்ச்சிகளாகச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

## நிச்சயதார்த்தம்

"இருபெருங் குரவரும் ஒரு பெரு நாளால் மணவணிகாண மகிழ்ந்தனர்" (41–42) எனவரும் பகுதி, கோவலன் கண்ணகி இருவருக்கும் திருமணம் செய்வதற்காக ஒரு நல்ல நாளில் நிச்சயம் செய்த நிகழ்ச்சியைச் சுட்டுவது. திருமணம் நடைபெற்ற நல்ல நாள் பின்னர்த் தனியே குறிப்பிடப் பெறுதலாலும், பெற்றோர்களைப் பற்றிய குறிப்பு வெளிப்படையாக வருதலாலும் "மணவணி காண மகிழ்ந்தனர்" எனத் திருமண நிகழ்ச்சி பின்னர் நிகழவிருக்கும் குறிப்பு காணப்படுதலாலும், முதற்கண் இங்குச் சுட்டப்படுவது திருமண நிச்சயதார்த்தமே என அறியலாம். இது, திருமண நாளைக் குறிப்பதாகக் கொண்டு மயங்குதல் கூடாது.

## யானை மேல் மகளிர்

திருமணம் நிச்சயம் செய்யப்பட்டதை, ஊராருக்கு அறிவிக்கும் நிலையில் அலங்கரிக்கப்பட்ட பெண்களை யானைமேல் ஏற்றி அனுப்பி இச் செய்தியை அறிவிப்பது பண்டைக்காலத்தில் செல்வக் குடும்பத்தினருக்கு உரிய மரபாக இருந்தது என்பதை "யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ மாநகர்க்கு ஈந்தார் மணம்" (43–44) எனவரும் பகுதியால் அறிகின்றோம். "யானை எருத்தத்தின்மேல் அணியிழையாரை இருத்தி மாநகர்க்கு அறிவித்தார்" என அரும்பத உரைகாரரும், "சிலமகளிரை அணிந்து யானையேற்றி அறிவித்தல் மரபு" என அடியார்க்கு நல்லாரும் இம்மரபினைத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நிச்சயதார்த்தம், திருமணச் செய்தியை ஊராருக்கு அறிவித்தல் ஆகிய இரு நிகழ்ச்சிகளும் திருமணத்திற்கு முந்தியவை. ஊராருக்கு அறிவித்தல் எப்படி என்பதை விளக்கும் முறையில் பின்னுள்ள மூன்று அடிகளின் (45–47) செய்திகள் உள்ளன.

அவ்வழி,
முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம் வெண்குடை
அரசெழுந்ததொர் படியெழுந்தன அகலுள் மங்கல அணியெழுந்தது

எனவரும் பகுதி திருமண நிகழ்ச்சியை ஊரவருக்கு அறிவிக்கும் செயல் முறையைச் சுட்டுகின்றது. முரசு, மத்தளம், பணிலம் என்ற இசைக் கருவிகள் முழங்க, வெண் கொற்றக் குடைபிடித்துக் கொண்டு, மங்கல அணியாகிய திருமாங்கல்யத்தை ஊர்வலம் வரச் செய்தனர். இம்முறையில் செய்வதே திருமணச் செய்தியை ஊரவருக்கு அறிவிக்கும் முறை. இவை, திருமணத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள் ஆகும்.

## திருமணப் பந்தல்

செல்வச் சிறப்பின் பொலிவு தோன்றும்படி, திருமணம் நிகழ்வதற்குரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. வைரமணித்தூண்கள் வரிசையாக நிறுத்தப்பட்ட மண்டபம், மண்டபத்தின் மேற்கூரையில் நீலவிதானம்; அதில் அழகுச் சிறப்போடு தொங்கவிடப் பெற்ற முத்துமாலைகள். இங்ஙனம் அமைந்த திருமணப் பந்தல் சிறப்பை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர் (48–49)

என்பது இதனை விளக்கும் சிலம்புப்பகுதி.

> ............... நிரைகால்
> தண்பெரும் பந்தர் திருமணல் ஞெமிரி
> மனைவிளக் குறுத்து மாலை தொடரி (அகம் 86:2–4)

எனச் சங்க இலக்கியப் பாடலொன்றிலும் இதுபோன்ற திருமணப்பந்தல் சிறப்பைக் காணலாம். செல்வக் குடும்பத்தின் சிறப்புக்கு ஏற்பத் திருமணப் பந்தல் அமைப்பிலும் கூடச் செல்லப் பொலிவு விளக்கமுறுகிறது.

## திருமணம் நிகழும் நாள்

திருமணம் நல்ல நாளில் நிகழ்த்தப் பெறுதல் வேண்டும் என்பது பண்டைக்கால முதல் மக்களிடையே நிலவிவரும் மரபு. சந்திரன் உரோகிணி என்னும் நட்சத்திரத் தோடு சேரும் நன்னாளே திருமண நாளாகப் பெரும்பாலும் கருதப்பட்டது.

> கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
> கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
> கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென (அகம் 86:5–7)

என்றும்,

> அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
> சகட மண்டிய துகள்தீர் கூட்டத்து (அகம் 136:4–5)

என்றும் வரும் சங்க இலக்கியப் பகுதிகள், பண்டை மக்களால் சிறப்புடையதாகக் கருதப்பட்ட இந்நன்னாளைச் சுட்டுகின்றன.

கோவலன் கண்ணகி மணமும், சந்திரன் உரோகிணியுடன் கூடிய நன்னாளிலேயே நிகழ்ந்தது. "வானூர் மதியம் சகட்டணைய" (50) எனவரும் தொடர் இந்நன்னாளை உணர்த்தும். "சந்திரன் உரோகிணியைச் சேர அருந்ததியினது தகையாளைக் கோவலன் கலியாணம் பண்ணுவது" என அரும்பத உரைகாரரும் இந்நன்னாளைக் குறிப்பிடுவர். இங்ஙனம் நல்லநாள் பார்த்து, அந்நாளில் திருமணம் செய்யும் நிலையை மரபு வழி நின்று இளங்கோவடிகள் இங்கு விளக்கியுள்ளார்.

## சடங்குகள்

கோவலன் – கண்ணகி ஆகிய இருவருக்கும் நிகழ்ந்த இத் திருமணத்தில், அந் தணர் திருமணத்தை நடத்திவைத்தல், வேதம் ஓதுதல், மணமக்கள் தீயை வலம் செய்தல் முதலிய திருமணச் சடங்குகள் இருந்தன. இளங்கோவடிகள் "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீ வலம் செய்வது" (52–53) என்ற தொடரின் மூலம் இதனை இங்கு விளக்கியுள்ளார்.

இதுபோன்ற பல்வேறு திருமணச் சடங்குகள் பண்டைக்காலத்திலேயே பின் பற்றப்பட்டன என்பதைப்

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொ. கள. 4)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். சடங்குகள் இங்குக் "கரணம்" என்ற சொல்லால் சுட்டப்பட்டுள்ளன. பொய், வழு, ஐயர், கரணம் என இந்நூற் பாவில் பயின்ற சொற்களுக்குப் பிற்காலத்தில் வேறு முறையிலும் விளக்கம் கூறப்படும்.

கரணம் என்ற சடங்குமுறைகள் காலச் சூழலுக்கும், செல்வநிலைக்கும் ஏற்ப வளர்ச்சியும் மாற்றமும் பெறும். சங்ககாலத் திருமணச் சடங்குகளை நாம் அறிவதற்குத் துணையாக அமைந்த இரு அகநானூற்று மருதப்பாடல்களில், சிலம்பில் கூறிய சடங்கு முறைகள் குறிப்பிடப்பெறவில்லை. எனவே இச்சடங்குகள் பண்டைக்காலத்தில் உள்ளன வா அல்லனவா என்பதை அறியச் சான்றுகள் இல.

சிலம்பில், பார்ப்பனர் திருமணப் புரோகிதராக இருந்து திருமணம் நடத்துதல், மறை ஓதுதல், தீவளர்த்து மணமக்களை வலம்வரச் செய்தல் முதலிய சடங்கு முறைகள் தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. வேதம் ஓதுதல் என்ற முறையைக் குறிப்பிட வே எஞ்சியனவும் இயல்பாகவே இடம் பெறும். எனவே இது, வைதிக முறையில் நிகழ்ந்த திருமணமாகவே தெரிகிறது. கோவலன் சமணசமயத்தைச் சார்ந்த சாவக நோன்பி என்பதைச் சிலப்பதிகாரக் குறிப்புகள் தெளிவிக்கின்றன. எனவே, இக்குறிப்புகளால், சமண சமயத்தார்கள், பண்டைக்காலத்தில் வைதிக மரபைத் தழுவியே திருமணம் செய்துகொண்டனர் என்ற முடிவுக்கு வர இயலும். எனவேதான் சமண சமயத்தைச் சேர்ந்த கோவலன் திருமணம் வைதிக முறையில் நிகழ்ந்ததாக இளங்கோ வடிகள் இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

## திருமணக் கூட்டம்

செல்வச் சிறப்புடைய மாசாத்துவான் மகனுக்கும் மாநாய்கன் மகளுக்கும் நடைபெற்ற இத்திருமணத்தில் பூம்புகார் நகரமே திரண்டு வந்திருக்கும். மன்னர் குலத்தாரும், வணிகர்குலத்தாரும் இத்திருமண விழாவுக்குத் திரளாக வந்திருப்பர். இக்கூட்டத்தைச் சுட்டும் இளங்கோவடிகள்,

விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்தின முலையினர் இடித்த சுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்த பாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர் *(54–59)*

எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள், திருமணத்தைக் காண வந்த கூட்டத்தினர் மட்டுமல்ல; திருமணப்பணிகளிலும் ஈடுபட்ட கூட்டத்தினர் ஆவர்.

இங்குச் சில குறிப்புகள் சிந்திக்கத்தக்க நிலையில் உள. "பாட்டினர்" என்பதால் மணமக்களை வாழ்த்தி "நலுங்கு பாடுதல்" என்ற நிகழ்ச்சியும், "விளக்கினர்" என்பதால் "நாத்தி விளக்கு ஏந்தல்" என்ற நிகழ்ச்சியும் "விரிந்த பாலிகை முளைக்குட நிரையினர்" என்பதால் "முளைப்பாலிகை விடுதல்" என்ற நிகழ்ச்சியும் இத்திருமணத்திற்குரிய சடங்குகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்று குறிப்பாக அறியமுடிகின்றது.

இவைபோன்ற சில சடங்குகளை "உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்" (அக. 86:8) எனவரும் சங்க இலக்கியத் தொடரும் குறிப்பிடுகின்றது.

## மணமக்களை வாழ்த்துதல்

திருமண நிகழ்ச்சியின் இறுதியில், மணமக்களை மங்கலப் பெண்டிர் வாழ்த்தும் நிகழ்ச்சி இடம் பெறுகிறது.

போதொடு விரிகூந்தல் பொலனறும் கொடியன்னார்
காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக எனவேத்திச் சின்மலர் கொடுதூவி *(60–62)*

எனவரும் பகுதி மணமக்களை வாழ்த்தும் செயல் முறையைச் சுட்டுகிறது. இதில் வாழ்த்துக் கூறுபவர், வாழ்த்தும் வாசகம், வாழ்த்தும் முறை ஆகியன இடம் பெற்றுள்ளன.

திருமணத்தில் வாழ்த்துக்கூறும் உரிமையுடையவர் மங்கலப் பெண்டிர் என்பதை இளங்கோ இங்குக் குறிப்பிட்டுள்ளார். மலர் அணிந்த கூந்தலையுடைய பூங்கொடி போன்ற மங்கல மடந்தையர் வாழ்த்தினர் என்பதைப் "போதொடு விரிகூந்தல் பொலனறும் கொடியன்னார்" என்ற தொடரால் இளங்கோ மொழிந்துள்ளார். பெண்டிர் வாழ்த்துதல் என்பதால், இளங்கோ இங்குக் குறிப்பாக ஒரு கருத்தை உணர்த்துகிறார் எனலாம்.

"புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று வாலிழை மகளிர் நால்வர்கூடி" (அக. 86:11–12) என வரும் சங்க இலக்கியக் குறிப்பால் "மணமக்களை வாழ்த்துதல்" என்னும் சடங்குமுறை பெண்கள்கூடி "ஆராத்தி எடுத்தல்" என்ற இன்றைய சடங்கை ஒத்திருக்கலாம் என்று தெரிகிறது. "நால்வர்கூடி" இருப்பது ஆரத்தி சுழற்றும் போது என்பது பொருத்தமாக இருக்கும். எனவே, பெண்டிர் வாழ்த்துதல் என்ற குறிப்பால் இளங்கோவும் ஆரத்தி சுழற்றி வாழ்த்தும் மரபையே இங்குக் குறிப்பிட்டுள்ளார் எனத் தெளியலாம்.

மேலும் மங்கலப்பெண்டிர், புதல்வர்களைப் பெற்றோர் எனவரும் விளக்கங்களாலும் மணமக்களை வாழ்த்துதல் என்னும் செயல் ஆரத்தி சுற்றி வாழ்த்தும் முறையையே குறிப்பிடுகிறது எனலாம்.

ஆரத்தி சுழற்றுங்கால் வாழ்த்துக் கூறலும், மலர்தூவி ஆசிர்வதித்தலும் இடம் பெறுகின்றன. சங்க இலக்கியப் பாடலிலும்

"கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு என" (அக: 86:13–14)

என்று வாழ்த்துரையைக் கூறுவது இடம் பெற்றுள்ளது. நீர், மலர், நெல் ஆகிய பொருள்களால் வாழ்த்தும் மரபை

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க (அக 86:15–16) எனவரும் சங்க இலக்கியப் பாடற்பகுதி உணர்த்துகின்றது. இது போலவே, தேவந்தி என்ற அந்தணத் தோழி, கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியை "அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச்சென்று பெறுக கணவனோடு" (9:43–44) என வாழ்த்தியதாகவும் சிலம்பில் கனாத்திறம் உரைத்த காதையில் செய்தி இடம்பெற்றுள்ளது.

இங்கு, ஆரத்தி சுழற்றிய மகளிர் "காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக" என வாழ்த்துகின்றனர். "சின்மலர் கொடு தூவி" என்பதால் மலர்களைத் தூவி ஆசிர்வதிக்கின்றார்கள் என்றும் அறியலாம்.

## நாடகமுரண்

மணமக்களை வாழ்த்துவதாக வரும் வாழ்த்துரை நாடக முரண் என்ற உத்தி முறையில் சிறந்த பொருள் ஆழத்தோடு விளங்கும் பகுதியாகும்.

"காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக" (61–62)

என்பது வாழ்த்துரை. இதில் மூன்று கூறுகள் உள. காதலனாகிய கோவலனைப் பிரியாமல் வாழ்க; காதலி கரத்தோடு இணைந்த இவன் கைகள் நெகிழாமல் வாழ்க; தீமையின்றி வாழ்க – என்பது வாழ்த்துக் கூறுகள். இம்மூன்று கூறுகளுமே எதிர்மறை வாய்பாட்டில் ஒலிக்கின்றன. இன்னும் தெளிவாகக் கூறினால் மங்கல நிகழ்ச்சியின்போது இவ்வாழ்த்து அமங்கலச் சொற்களாக இசைக்கிறது. இவ்வாழ்த்தையே காதலனோடு இணைந்து வாழ்க; உன்காதலியின் கரத்தோடு உன்கரம் பிணைந்து வாழ்க; நன்மை பெறுக என்ற முறையில், உடன்பாட்டு வாய்பாட்டில் மங்கலச் சொற்களாகவே கூறி வாழ்த்தியிருக்கலாம். மங்கலப்பெண்டிர்களாகிய அவர்களுக்கு இன்ன சொற்களால் வாழ்த்தவேண்டும் என்று தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

எனினும், இம்முறையில் எதிர்மறை வாய்பாட்டில் அமங்கலமாக இவ்வாழ்த்துரையை அமைத்துக் காட்டுவதன்மூலம், இளங்கோவடிகள் நாடக முரண் என்ற உத்தியைப் பயன்படுத்தி, பின்னே நிகழவிருக்கும் கதை நிகழ்ச்சிகளை முன்னரே கற்பவருக்கு உணர்த்திவிடுகின்றார்.

இவர்கள் வாழ்த்துரை நிகழ்ந்த சில ஆண்டுகளிலேயே கண்ணகி தன் காதலனைப் பிரிகின்றாள்; அவளைப் பற்றிய அவன் கை நெகிழ்கிறது; இறுதியில் கணவன் கொலைப்